www.tamilarangam.net

# பழக்கப் படுத்திக் கொள்ளுமாறு பரிந்துரைக்கிறது மரணம்



மரணம் பற்றிய செய்திகள் இப்பொழுதெல்லாம் எமக்கு மிக சகஜமாகிவிட்டது. முன்பு கள்வனைப் போல் வந்த மரணம் இப்போது எமக்கு முதலே தெரியக் கூடியதாக வந்து எம்மோடு உரையாடி தான் உறவாட விரும்புகின்றேன், என்று எம்முடன் உரையாடி என்னையும் உன்னுடன் பழக்கப் படுத்திக் கொள் என்று கேட்பது போலவே எனக்கு புலப்படுகின்றது.புலம் பெயர்ந்த பின்பு ஏற்பட்ட மரணங்களில் சில எம்மைவிட்டு அகலாது. நான் மரணமடையவில்லை என்று ஒவ்வொரு நாளும் எம்முன் தோன்றுகின்றது. எமது தந்தை இறந்துவிட்டால் நாம் தந்தையை மறப்பதில்லையே. அதுபோல் தான் எம்முடன் வாழ்ந்து மறையும்சில உறவுகளும்.நண்பன்புஸ்பராசாவின் மரணச் செய்தியும் என் வாழ்வில் அப்படித்தான் 1978ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழக தமிழ் மன்ற விழாவிற்கு நிதி சேகரிப்புக்காக K.K.S சென்ற போது ஓர் இடத்தில் சந்தர்ப்பவசமாக நாம் சிக்கியபோது எம்மை அவ்விடத்தை விட்டு அகலுமாறு கேட்கிறார். நான் நீங்கள் யார் என்று கேட்டபோது நான் புஸ்பராசா என அறிமுகப்படுத்தியவர் அன்றில் இருந்து இறுதி மூச்சு விடும்வரை ஒரு நல்ல நண்பனாகவே பல செயற்பாடுகளில் இணைந்தும், பிரிந்தும் செயல்பட்டோம். சம கால அரசியல், இலக்கியம் சமூகம் குறித்து தீவிர அக்கறை கொண்டிருந்த நண்பன் புஸ்பராசாவின் மறைவு நெஞ்சை உறையவைக்கும் ஒரு கொடிய நிகழ்வாகும். புலம்பெயர் மண்ணில் சபாலிங்கம், உமாகாந்தன், கலைச்செல்வன் போன்ற நேர்மைமிக்க அரசியல், இலக்கிய செயற்பாட்டாளர்களை இழந்து வெறுமையில் நிற்கையில் தற்போது புஸ்பராசாவையும் இழந்து நிற்கின்றோம். எம்முடன் வாழ்ந்த ஒரு விடுதலைப் போராளியை இழந்து விட்டோம். நான் என் நண்பனிடம் கற்றுக்கொண்டது இதுதான் பெரும் விவாதங்களும், ஆழ்ந்த கருத்து வேற்றுமைகளும் புதிய சிந்தனைக்கு இட்டுச்செல்லும். இதை தான் கடைசிவரை செய்தார். அலுத்துப்போன அரசியல் வாய்ப்பாடுகளிலோ கிழடு தள்ளிபோன புரட்சியிலோ நம்பிக்கை இல்லை என்பதினை கடைசி மூச்சு விடும் வரை வலியுறுத்திய நண்பன் புஸ்பராசாவின் இழப்பு துயரமானது.

ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலை தந்துவிட்டு இன்னும் சில சாட்சிகள் சொல்வார் என்று எதிர்பார்த்திருக்கையில் (செவ்வாய்) இந்தியா செல்வதற்கு முதல் வழமை போல் தனது வாய்ச்சண்டையை என்னுடன் காட்டிவிட்டு திங்கள் கடைக்குவந்து “சோர்ந்து போகாதே” என்று சொன்ன நண்பன் மீண்டும் வரமாட்டேனென்று சொல்லவில்லையே. 2000 ஆண்டு ஒரு சில நிமிடங்களில் நீ எடுத்த முடிவில் அறிவாலயம் தோற்றம் பெற்றதினை மறக்கமுடியுமா? அதன் பின்பு ஒவ்வொரு செயற்பாட்டிலும், அதன் வளர்ச்சியிலும் எவ்வளவு அக்கறையுடன் ஆலோசனை வழங்கி வந்தாய். இன்று உன் மறைவு பாரிய வெறுமையை தோற்றுவித்துள்ளது.

எமது நண்பர்கள் மத்தியில் எங்கெங்கு முரண்பாடுகள் தோன்றினாலும், அங்கங்கே சுமூகப்படுத்தும் ஒரு முதலுதவிப்படையாகவே செயற்பட்ட புஸ்பராசா இன்று எம்மத்தியில் இல்லை என்பதனை மனம் ஏற்க மறுக்கிறது.

எப்போதுமே ஒருவனுடைய பேராளுமையை எல்லோரும் ஏற்றுக்கொள்வதில்லை. அதனால் அவர்களின் ஆளுமை மேல் வக்கிரங்கள் வந்து விழவே செய்யும். அதனை நன்குணர்ந்த நண்பன் புஸ்பராசா தன் மீது வீழ்ந்த அனைத்தையும் மறந்து அனைவரையும் அரவணைத்து செயற்பட்டார். காலம் தன் அச்சை விட்டு அகலாது என்பதனை கடைசிவரை நிருபித்த நண்பன் புஸ்பராசாவின் வாழ்க்கை ஒரு கலை. மரணத்தினை ஏற்றுக்கொள்வதும் ஒரு கலை. சிலரது மரணத்தினை நாம் சந்திப்பதும் அதுபற்றி சிந்திப்பதும் தான் வாழ்க்கை என்பதினை புஸ்பராசா உணர்த்தியுள்ளார். ஒரு தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளை ஒருபோதும் எம்மால் செய்யமுடியாது ஆனால் எம்மரணம்வரை மறக்கவும் முடியாது. அதுபோல நல்ல நண்பனையும் மறக்க முடியாது. என் வாழ்நாளில் இதுவரை பிறிதொருமனிதர்மீது இத்தனை ஈர்ப்பை உணர்தலில்லை. நாம் வாழும் காலத்தில் பெரும் ஆளுமைகளில் ஒருவராக புஸ்பராசாவை நான் காண்கிறேன். உன்னை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏன் எனில் நீ சாகவில்லை வந்து சொல்லி விட்டுப் பயணம் தான் போயிருக்கிறாய். அவ்வளவுதான்.

மீழாத் துயரத்தில் இருக்கும் நண்பன் புஸ்பராசா குடும்பத்து உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

பாரீஸ் அறிவாலயம்.

14.03.2006

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# நான் புஸ்பராஜா பேசுகிறேன்



## 1951-2006

www.tamilarangam.net

நான் புஸ்பராஜா பேசுகிறேன்:

காலநீரோடையில்
முன்னேறி வந்த மீன் ஒன்று
பல கரடிகளிடமிருந்து உயிர் தப்பி
அடிநீர் சென்று - தன் இறுதி செய்திகளை
சொல்ல யாருமற்று அதைப் பதிவாக்கிக் கொண்டது.

பிரியும் நேரம் வந்தாகிவிட்டது. உங்களிடம் இருந்து பிரிவது என்பது தாங்க முடியாத வேதனையான செய்தியானாலும் அதை தவிர்க்க முடியாது முகம் கொள்ள வேண்டியுள்ளது என்பதுவும் பெரியதொரு உண்மையே. நான் மரணத்தை எண்ணி என்றும் பயந்தவனல்ல. இதில் மகிழ்ச்சி என்னவென்றால், மரணம் முகம் காட்டி என்னை அழைத்துச் செல்வதால் நானும் உறவினர் நண்பரிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் ஓர் அருமையான அரிதானதொரு சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன். என்னுடன் கருத்தியல்ரீதியாக முரண்பட்டவர்கள்கூட எனது முடிவறிந்து கண்ணீர்விட்டபோது எம் சமூகத்தில் இறுதி மூச்செறிந்து கொண்டிருக்கும் சனநாயகப் பண்பு பற்றியதொரு பெருமையில் மகிழ்வு கொண்டேன். எனது முகமறிந்தும் முகமறியாமலும் சோகம் கொண்டவர்களை நினைத்து இவ்வளவு உறவு இலைமறைவில் இருந்ததா என ஏக்கம் கொள்கிறேன்.

"உங்களை எல்லாம் இனிப் பார்க்க இயலாது என்னும் நேரம் வந்தபின் உங்கள் இதயத்தில் நான் இருப்பேனா?"

இந்தப் பிரிவு நேரத்தில் நான் நேசித்தமண்ணையும் மக்களையும் பற்றியதொரு ஏக்கம்தான் எனக்கு இதயத்தில் பெரும் நெருடலாக உள்ளது. என் சக்திக்கு உட்பட்டு என்னால் இயன்றதைச் செய்தேன். அது வெற்றியளித்தது. எனது நாட்டின் பேரினவாத அரசியல்வாதிகளிடமும் எனது மண்ணுக்காகப் போராடுபவர்களையும் இதர குழுக்களையும் இந்த நேரத்தில் நான் இரு கரங்களையும் கூப்பிக் கேட்பது "தயவு செய்து கொலைகளை நிறுத்துங்கடா. போதும் கொலைவெறி, மனித சுதந்திரத்தை மதியுங்கள். உயிரின் விலையை மதியுங்கள்"

நன்றி

சிபுஸ்பராஜா.



www.tamilarangam.net

# மரண அறிவித்தல்

**பிறப்பு**
**30.11.1951**



**மறைவு**
**10.03.2006**

## திரு. சி. புஸ்பராஜா அவர்கள்

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திரு. சிதம்பரி புஸ்பராஜா அவர்கள் 10.03.2006 வெள்ளிக்கிழமை அன்று பிரான்சில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறோம். இவர் காலஞ் சென்ற திரு. திருமதி சிதம்பரி (ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகஸ்தர்) - சின்னம்மா தம்பதிகளின் மகனும் மீரா அவர்களின் அன்புத் துணைவருமாவார். கீதாஞ்சலி(லண்டன்), விதுரன்(பிரான்ஸ்), துரோணன்(பிரான்ஸ்), வீஷ்மன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திரு. கேதீஸ்வரன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனும், காலஞ்சென்ற செல்வராஜா, நாகராஜா, மற்றும் தியாகராஜா(புகையிரதத் திணைக்களம்-இலங்கை), புஸ்பராணி(பிரான்ஸ்), வரதராஜா(பிரான்ஸ்), ஜீவரட்ணராஜா(இலங்கை), நவரட்ணராணி(லண்டன்), புஸ்பலதா(பிரான்ஸ்), வதனராணி(லண்டன்), மகேந்திரராணி(லண்டன்), செந்தில்ராஜா(பிரான்ஸ்), ஸ்ரீகாந்தராணி(லண்டன்) ஆகியோர்களின் நேசமிகு சகோதரனும், விஜய்(பிரான்ஸ்), மகேஸ்வரன் (சமாதான நீதவான் - இலங்கை) கலாராணி(பிரான்ஸ்), சிவலிங்கம்(லண்டன்), மொறிஸ்(பிரான்ஸ்), கார்த்திக்(லண்டன்), ரவீந்திரராஜா(லண்டன்), சுஜாதா(பிரான்ஸ்), ஸ்ரீபன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**இறுதி அஞ்சலி நிகழ்வுகள் 14.03.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12:30 தொடக்கம் 14:45 வரை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.**

இறுதி நிகழ்வு நடைபெறும் மயானம்:

**Cimetière Intercommunal Les Joncherolles**

**95 rue Marcel Sembat**

**93430 VILLETANEUSE.**

புஷ்பராஜா குடும்பத்தினர்

கீழ்வரும் முகவரியில் உருவஉடல் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்

Maison Funeraires de Gonesse
1 avenue de Maraichers Juin
95500 GONESSE.

பார்வையிடும் நேரங்கள்:
சனி - காலை 9:00 - 11:00, பி.ப. 15:00 - 17:00
ஞாயிறு - காலை 10:00 - 12:00, பி.ப. 15:00 - 17:00
திங்கள் - காலை 8:30 - 12:00, பி.ப. 13:30 - 17:00
செவ்வாய் - காலை 10:00 - 12:00

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| வீடு: | 01 39 86 31 30, |
| | 06 12 80 35 51 |
| புஷ்பராணி: | 01 49 73 04 84 |
| வரதராஜா: | 01 40 40 75 26, |
| | 06 64 83 53 00 |
| புஷ்பலதா: | 01 48 55 37 94 |
| செந்தில்ராஜா: | 06 20 21 16 41 |

லண்டன் தொடர்புகளுக்கு:
நவரட்ணராணி: 00 44 208 514 14 27

மின்னஞ்சல்: vithuran84@hotmail.com

www.tamilarangam.net

# பிரார்த்தனை புரிகின்றேன்



நண்பா உன் கடைசிப் பார்வையும்
விமர்சனமும் புயலுக்குப்பின் நாவல்தான்
விடைபெறும் முன் கடைசியும் முதலுமாக
எண்ணமாய் உரையாடிய நண்பா
உயிர்விட்ட இக்கணத்தை நானின்று
பிரார்த்தனை செய்கின்றேன் அந்தநாள்
மறுபடியும் ஞாபகச் சுவரில் எதிரொலிக்கும்
மூடிய கீறல்கள் நாளை நிச்சயம்
புன்னகைக்கும் சாட்சியம் பகரும்
நண்பா உன்சாவு இனிதானது
விடைபெற்ற இறுதியின் நிறுத்தத்தை
வெற்றிப் புள்ளியென்று
இன்று நாளை சொல்லலாம்!
என்கவியும் காலமும் நண்பா
என்றும் பிரார்த்தனை புரிகின்றது

போக்கிட முடியா மேகத்தின்
பெருமூச்சு இறக்கிவிட்ட சோகப்
பெருமழையாகக் கண்ணீர்
உன்னடி நனைக்கின்றது.....

கவிஞன் மா கி கிறிஸ்ரியன்
14 03 2006

www.tamilarangam.net

# நட்புக்கோர் இலக்கணமானவன்

1951  2006

## சிதம்பரி புஸ்பராஜா

*தமிழ்த் தேசியப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவனாயிருந்து, புலம்பெயர் இலக்கியத்திலும் தன்னை இணைத்துக்கொண்டு, ஒரு சமூக சிந்தனையாளனாக வாழ்ந்து, மடிந்த நண்பர் புஸ்பராஜா தனது புலம்பெயர் வாழ்வின் மிகப்பெரும் பகுதியை, எமது பகுதியில் வாழ்ந்து களித்தவர் என்ற பெருமிதத்தை, எமது கிராமமாகிய* **Garges les Goness** *பெற்றுக்கொள்கின்றது.*

*மிக அண்மையில் இங்கிருந்து இடம்பெயர்ந்து,* **Gousanville** *பகுதிக்குச் சென்றாலும், தான் இறப்பதற்கு முன்னையநாள் மாலைப்பொழுதில் எமது பகுதிக்கு வந்து எம்மையெல்லாம் பார்க்கவேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்திச் சென்றமை, நீ எம்மீது வைத்திருந்த அபரிமிதமான வாஞ்சையைவெளிப்படுத்தி நிற்கிறது.*

*நண்பனே! உன் உடல் நலம் குன்றியிருந்த வேளையிலும், உள்ளத்து உறுதியோடும், உணர்வுகளோடும் இறுதிவரை செயற்பட்டு நின்றாய்.*

*நீ கொண்டிருந்த ஆசைகளும், அபிலாசைகளும் பூரணமாகப் பூர்த்தியாகுமுன்பே மரணம் உன்னைத் தழுவிவிட்டது.*

*நீ போட்ட விதைகள் முளைத்து செழித்து வளர்ந்து உன்னுடைய கனவுகளை நனவாக்குமென நாம் திடமாக நம்புகின்றோம்.*

ஓர் அஸ்மனத்தின் இறுதியே - இன்னோர் உதயத்தின் தோற்றுவாய்

வழியனுப்புகின்ற

**கார்ஜ் சார்சல் நண்பர்கள் வட்டம்**

www.tamilarangam.net

# Sri-Lanka Verein e.V., Stuttgart

(Eintragungsnummer: VR 6635, Amtsgericht Stuttgart)

Sri-Lanka Verein e.V., Stuttgart, Postfach 50 08 49, 70338 Stuttgart

Stuttgart, den 14.03.2006

## கண்ணீர் அஞ்சலி

"...சில மனிதர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழவில்லையே அவர்களைக் கண்ணால் காணவில்லையே என்ற வேதனைகள் எமக்கெல்லாம் உண்டு தந்தை ஈ.வெ.ரா பெரியார், அன்னை தெரேசா காலத்தில் வாழ்ந்தும் அவர்களைக் கண்ணால் காணவில்லையே என்ற ஏக்கம் எனக்கு உண்டு..." (சி.புஸ்பராஜா, *"ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்"*)



நீ வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்று மகிழ்வடைகிறோம். மனிதர்களின் தேடலின் வெற்றியே இன்றைய உலகின் நவீன வாழ்க்கை இந்த தேடல்களை தேடியவனில் நீயும் ஒருவன். உன் தேடல் உன்னை நவீன மனிதனாக்கியது. இரண்டு நூற்றாண்டு வாழ்ந்த மனிதனாய் பல இலட்சியங்களில் பங்கேற்றவனாய் போற்றப்படுகிறாய். சென்ற நூற்றாண்டும் இந்த நூற்றாண்டும் வாழ்ந்து ஈழத்தமிழருக்காய் போராடினாய். தாயகத்தின் நினைவுகளோடு பாரிஸில் வாழ்ந்து மறைந்து போன சபாலிங்கம், உமாகாந்தன், கலைச்செல்வனோடு உன்னையும் நாம் இழந்து தவிக்கிறோம்.

"தேதியை நிச்சயித்து வரும் பிறப்பு
தேதியை நிச்சயித்து வரும் திருமணம்"
ஆனால் உனக்கோ மரணத்திற்கும் தேதியை குறித்து விட்டார்கள்!
நாட்களை எண்ணிக்கொண்டு வாழும் சோகம் மரணத்திலும் கொடுமையானது.
அதை நீயும் உன் குடும்ப அங்கத்தவர்களும் எப்படி எதிர்கொண்டிருந்திருப்பீர்கள் என்பதை சொல்லிமாளாது.

துயருறும் உன் குடும்பத்தோடு அவர்கள் கவலையில் பங்கேற்று நாமும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

இலங்கையர் சங்கம்,ஸ்ருட்காட், ஜேர்மனி

*Vorstand:*

- **Vorsitzende:** Frau Mary Wijayakumar, Erwin Bälz Str. 44, 74321 Bietigheim-Bissingen (Tel: 07142/940119)
- **Schriftführer:** Herr Sivasamy Sivarajan, Stuttgarter Str. 36, 73760 Ostfildern (Tel: 0711/4411769)
- **Schatzmeister:** Herr Ganesh Kangatharan, Mönchhaldenstr. 107, 70191 Stuttgart (Tel: 0711/2579923)

*Bankverbindung:* Landesbank Baden-Württemberg (LB-BW), BLZ 600 501 01, Konto 24 64 644

www.tamilarangam.net

# புஸ்பா பயணிக்கிறான்!

தோழியரே, தோழர்களே!



ஈழப்போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்னும் சர்ச்சைக்குரிய நூலின் ஆசிரியரும் இலக்கியச் சந்திப்பின் பங்காளரும் ஒத்தோடாதவருமான தோழன் அல்லது அண்ணன் சின்னம்மா சிதம்பரி புஸ்பராஜா தனது ௬௪ வருட ஸ்துாலத்தை விட்டுப் பயணிக்கிறான்.

மூளையைப் புறந்தள்ளி
நெஞ்சுக் கூட்டால் நினைக்கிறேன்
உனது மரணத்தில் உனது மரணத்துக்காக விழி சொரிகிறது
உனது நினைவுத் தடப் பதிப்பில் அது தேங்குகிறது
அதன் கீழ்
வித்தொன்று நீருக்காய்த் தவம் இருக்கலாம்
வழியனுப்பல் தவிர என்ன முடியும் எம்மால்
வாழ்வு என்பதே விசித்திரமானது முரண்பாடுள்ளது
முரண்பாடுகளே வாழ்வியல் நியதி
சமாதானம் என்பது சுதந்திரமானது
சுதந்திரம் என்பதே விடுதலை என்பது
விடுதலை என்பது
சிறைகளைத் தகர்த்தல்
பிரக்ஞை கொண்டிருத்தல்
சிந்தனை செய்தல்
சிந்தனை செய்வதைப் பகிர்ந்திட முடிதல்
புரிதல் சகித்தல் இசைவொடு வாழ்தல்
இன்னமும் பச்சை தெரியாப் பாலையில்
தொடர் நகர்வை வாழ்ந்தவனே
எங்கள் கூட்டுக் குரல் தகிப்பு
உனை வழி மொழியும் போய் வா நண்ப!

ராசன் றஜீன்குமார், 10.03.2006

www.tamilarangam.net

# புரட்சி வீரன் புஸ்பராஜாவிற்கு கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
**30 – 11 – 1951**



**மறைவு**
**10 – 03 – 2006**

மயிலிட்டி மண்ணில் பிறந்த நீ உனது வாலிப பிராயத்தில் சுகபோக வாழ்கை வாழாது தமிழர்களுக்கு சுதந்திரம் வேண்டுமென உன் தமிழ்ப்பற்று உணர்வால் 1974ம் ஆண்டு இளைஞர்கள் மத்தியில் புரட்சி வார்த்தைகளில் வசனம் பேசி இளைஞர் பேரவை என்ற ஓர் அமைப்பை உருவாக்குவதிலும் ஒருவனாய் திகழ்ந்தாய் அது அன்றே உயிர் பெற்றது. புரட்சி வார்த்தைகளை மேடையில் பேசும் போதும் ஒவ்வொரு வார்த்தைக்குப்பின் ஆழமான கருத்துக்கள் இருக்கும். அன்று உயிர் பெற்ற உனது புரட்சி வார்த்தைகளுக்கு அரசாங்கம் உனக்கு தண்டனையாக பல சிறைச்சாலைகளில் பல வருடங்கள் இரத்தம் சிந்தி சித்திரைவதைகளை தந்தது அதன் பலனாக இருதய நோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாகி இன்று அமைதியாக உறங்கி விட்டாய். அன்று ஆரம்பித்த விடுதலைப் போராட்டம் விடுதலையடையும் காலம் நெருங்கும் போது உறங்கி விட்டாய் இல்லை உறங்க செய்து விட்டது அந்த கொடிய நோய்

நாம் உன்னுடன் பழகிய காலம் பல, ஆரம்பத்தில் சினேகிதனாகவும் கடைசி காலத்தில் சொந்த சகோதரனுக்கு மேலாகவும் எம்முடன் கலந்து எமது இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்று எம்மை ஆழ்ந்த துயரில் விட்டு விட்டுப் பிரிந்து சென்று விட்டாய்.

உனது பிரிவால் துயறுரும்
Jaffna Stores ஸ்தாபனத்தார்

# நாம் தோற்றும் போகலாம்...



ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் எழுத்தாளருமான தோழர் சி.புஸ்பராஜா அவர்களின் மரணம் எங்களை உலுக்கி விட்டது. இலங்கைத் தமிழர்கள் மீதான அடக்குமுறைக்கெதிராகத் துணிந்தெழுந்த அன்றைய இளைஞர்களில் முக்கியமானவர் தோழர் புஸ்பராஜா அவர்கள். அடக்கு முறை எவ்வுரு எடுத்த போதும் அதனை எதிர்த்து நிற்கும் போராளியாகவே புஸ்பராஜா என்றும் இருந்துள்ளார் என்பதை இன்று நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

“ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்” என்ற அவரது அனுபவ நூலாக்கம் எமது போராட்டத்தை எழுதிய நூல்களில் முதன்மையானதாக இன்று ஆகிவிட்டது. அதுமட்டுமல்லாமல் கவிதை. விமர்சனம். சிறுகதை. பேச்சு என்று அவரது ஆக்க முயற்சிகளின் தளம் புகலிடத்தில் விரிந்து அகன்றதாக இருக்கிறது. மேற்படி படைப்பாக்கங்கள் எம் சமூகத்தில் நிலவுகின்ற சாதியக் கொடுமைகளுக்கும் ஏனைய சமூக அநீதிகளுக்கும் எதிரான உள்ளடக்கங்களையே கொண்டிருக்கின்றன.

இலக்கியச்சந்திப்பில் புஸ்பராஜா அவர்களின் பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியது. சபாலிங்கம் அவர்கள் பாரிஸில் கொல்லப்பட்டபோது அஞ்சி ஒளிந்து விடாமல் அதை இறுதிவரை கண்டித்தும் எதிர்த்தும் செயற்பட்டமை புஸ்பராஜாவின் துணிச்சலை எமக்கு என்றும் காட்டி நின்றது. “தோற்றுத்தான் போவோமா” என்ற சமகால அரசியல் இலக்கிய விடயங்களைத் தன்னகத்தே கொண்ட ‘சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்’ சார்பாக வெளியிடப்பட்ட தொகுப்பு நூல் இவரது ஓய்ந்துவிடாத தன்மையை வெளிக்காட்டியது.

நீண்ட காலம் பாரிஸில் வசித்த தோழர் புஸ்பராஜா அவர்கள் எந்த அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிந்து போகாது அரசியல் இலக்கிய கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு முன்நின்று செயற்பட்டவர். மாற்றுக் கருத்துக்களை முன்வைக்க முடியாத சூழல் புகலிடத்தில் நிலவிய காலங்களில் எல்லாம் எல்லாக் கருத்துக்களையும் சொல்வதற்கு ஒரு இடம் வேண்டும் என்பதில் அவர் எம்மில் பலரைப் போல் பலமற்றவர்களின் பலமாக இருந்து செயற்பட்டவர்.

இவரது மரணம் விட்டுச் சென்றிருக்கும் இட்டுநிரப்ப முடியாத இடைவெளி எங்களால் உணரப்படுகிறது.

துயருறுகின்ற அவரது துணை மீரா. பிள்ளைகள். சகோதர. சகோதரிகள். ஆத்ம நண்பர்கள் அனைவரோடும் எங்கள் ஆழ்ந்த துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

பாரிஸ் 10.03.2006

நண்பர்கள் வட்டம் — பிரான்ஸ்

இலக்கியச் சந்திப்பு நண்பர்கள்

www.tamilarangam.net

# விடைபெற்றாய் நண்பா!

ஒரு நெடிய பயணத்தின்போது அதன்பின்னான
திரும்புதலின் நம்பிக்கையின்போதும்கூட
மனசு பிரிதலில் அழுகிறது.
உறவுகளை மோந்துகொள்கிறது.
நட்பின் குரல்களை கேட்க புதுசுபுதுசாய்
முளைக்கிறது மனசு.

## நண்பன் சி.புஸ்பராஜாவுக்கு

## கண்ணீர் அஞ்சலி

எப்படி நண்பா உன்னால் முடிந்தது
சாவின் வரவை காலம் அறிவித்துவிட்ட பின்னரும்
இந்த ஆசைகளின் காடுகளுக்குள்
நீ பச்சையாய் விரியவும்
குரலில் இசையை நீ தப்பவைக்கவும்
முடிந்ததுபார்!
அதிர்கிறது நினைவுகள்

விடைபெறக் காத்திருக்கிறேன் என நீ
சொன்ன வரிகளிடை கனக்காத இதயங்கள்
இருத்தல் கூடுமோ
துயர் பகிர்கிறோம்
உனது சுவடுகள் படிந்த எழுத்துக்களும் சந்திப்புகளும்
எமை நீங்கா!
விடைபெற்றாய் நீ, ஆனாலும்
விடைபெறாதுன் நினைவுகள் எமைவிட்டு.
உனது ஆன்மா சாந்தியடையட்டும்!

**சுவிஸ் நண்பர்கள்**

**பிரிவின் துயரில் வாடும் மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருடன் நாமும் இணைகிறோம்.**

10மார்ச்2006

www.tamilarangam.net

# நினைவுகளை சுமந்தபடி ....



தமிழ் சமூகத்தை பீடித்த
கொடிய நோய்களிலிருந்து மீட்க
கலகக்காரனாக
தோளோடு தோள்கொடுத்த தோழனே
பாதிவழியில் பறிகொடுத்தோம்
தீராத நோய்க்கு இரையாக உன்னை.

உன் கனவுகள் மெய்ப்பட
தொடர்கிறோம் எம் பயணத்தை
உன் நினைவுகளையும் சுமந்தபடி...

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி E.P.R.L.F-P
ஐரோப்பிய கிளைகளின் ஒன்றியம்